# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :23 July 2024

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்

கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V*.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P*.பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

## முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com



அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்

**ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்**
பா. ரம்ஜான்

**சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்”பண்பாடு**
முனைவர் ப. மணிகண்டன்

**கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு**
செ. கயல்விழி

**அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்**
அ. குழந்தைசாமி

**சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்**
சித்ரா.ரா

**திருக்குறளில் வாய்மையில் சமரசம்**
முனைவர் து. சிவசித்ரா

**தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்**
முனைவர் பூ. சேகர்

**ஏகன் அநேகன்**
அகல்யா தர்மலிங்கம்

**Bhakti Marga of Saint Thyagaraja**
R. Sudhalakxmi

**The Evolution of Tattvas in Samkjya Philosophy**
Varun Srivatsan

**வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்**
பொன். கனகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை**
அ. சையதுஅலி பாத்திமா

**என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்**
சுதா .மு

**மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்**
கோ. சத்யா

**வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்**
சு. சத்தியப்பிரியா

**பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்**
திருமதி சு.வினோதா

**ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்**
பூபாலசிங்கம். தனேஸ்

**Representation of Culture in English Language Textbooks**
U. Thulasivanthana

**பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்**
கா. இராஜமாணிக்கம்

**பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்**
கா. இராஜமாணிக்கம்

**தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்**
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# யாரைக்கேட்டது இதயம் புதினத்தில் சமூகப் பார்வை

அ.சையது அலி பாத்திமா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
உடுமலை அரசு கலைக் கல்லூரி,
உடுமலைப்பேட்டை.

நெறியாளர் முனைவர் ப.அபுபக்கர்,
இணைப்பேராசிரியர்,
உடுமலை அரசு கலைக் கல்லூரி,
உடுமலைப்பேட்டை.

***Abstract:***

*Literature is related to the social environment that human life studies and gives more knowledge of the learning. Each language and literature shared the principles of self discipline, truth, education and morality. These principals help the society and people. In the modern tamil literature increased and improved day by day in the literature there are many types but nowadays novels also travelled in the society and it examined many incidents so that people are eager to look around in the literature. In the social changes novel is also part of literature. In this novel* ***"YARAI KETATHU ETHAYAM"*** *is written by SS Hamitha. This novel explored the society related notions and issues. In this research we will see how the society is real and what are the different kinds of issues that are raised.*

***Keywords:***

***Environment, tamil literature, novels , society, SS Hamitha.***

**ஆய்**வு சுருக்கம்

சமூகம் சார்ந்த சூழலமைவை உற்றுநோக்கியே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. தமிழ் சார்ந்த இலக்கியங்கள் மனிதனின் வாழ்வியலை செம்மைப்படுத்தும் நோக்கில் எழுச்சி பெறுபவை. ஒவ்வொரு இலக்கியம் சார்ந்த கூறுகளும் தனிமனித ஒழுக்கம், அறம், நீதி, கல்வி என எண்ணற்ற நற்பண்புகளை வலியுறுத்தும் நோக்கில் அமைகின்றன. நவீனத் தமிழ் இலக்கியங்கள் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இலக்கிய வகைகளில் இன்றளவில் முக்கியத்துவம் பெறுவது நாவல் இலக்கியம் ஆகும். சமூகத்துடன் இணைந்து பயணிக்கும் அனுபவத்தை புதினம் மூலம் பெறலாம். சமூகத்தில் நிகழும் நிகழ்வுகளை கண்முன் நிறுத்தும் காட்சியகமாக புதினம் திகழ்கிறது. சமூகச் சீர்திருத்தத்தில் முக்கியப் பங்காற்றுகிறது. புதின இலக்கியம். அவ்வகையில் ஆசிரியர் ஹமீதா அவர்களின் படைப்பான யாரைக் கேட்டது இதயம் என்ற புதினம் அமைகிறது. இப்புதினத்தில் காணலாகும் சமூகம் சார்ந்த நிகழ்வுகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள்: புதினம், இஸ்லாமியம், சமுதாயச் சிக்கல், சமூகம்,ஹமீதா

**முன்னுரை:**

சமூகவியல் என்பது சமூகத்தில் வாழும் மக்களையும் மக்கள் சார்ந்த குழுக்களின் அனைத்து விதமான நடத்தை செயல்பாடுகளையும் விரிவாக ஆராயும் இயல் ஆகும். ''சமூகவியல் என்ற சொல் இலத்தீன் மற்றும் கிரேக்கச் சொற்களிலிருந்து பெறப்பட்டது. இலத்தீன் ''சோசியஸ்'' என்ற சொல்லுக்குப் பொருள் தோழன் என்பதாகும். இதோடு கிரேக்கச் சொல்லான லோகோஸ் அல்லது அறிவு சேர்க்கப்பட்டது. துவக்கத்தில் சமூகவியல் என்றால் தோழனைப் பற்றிய அல்லது உடன் இருப்பவரைப்பற்றிய அறிவு என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டது. அதன்பின் சயேயஸ் (Emmanuel&joseph 1748&1836) முதன் முதலில் ''சமூகவியல்'' என்ற சொல்லை அறிமுகப்படுத்தினார்(1780). அவரைத் தொடர்ந்து அகஸ்டே காம்டே (1798-1857) சமூகவியலை சமூக இயற்பியல் (social physics) என்று கூறி அறிவியலாக்கினார். அதிலிருந்து சமூகவியலைப் பற்றிய பார்வையே மாறிவிட்டது. (ப.எண்-27)(சமூகவியல்)

**சமூகம் — பொருள் விளக்கம்**

சமூகம் என்ற சொல் சமூகக்கட்டமைப்பு, மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் சமூக அமைப்புகள், நடத்தைகள், மதிப்புகள் புதிய சமூகக் கட்டமைப்புகளையும் உள்ளடக்கியதாக ஆராய முற்படுகிறது.

சமூகம் என்ற சொல்லிற்கான பொருள் ''பல்வேறு வகைகளில் உறவு கொண்டு வாழும் மக்கள் தொகுதி, திரள், குமுகம், குமுகாயம், குறிப்பிட்ட இனம், துறை, தொழில் சார்ந்தவர்களின் தொகுதி, கூட்டம் அல்லது திரள், இனம், துறை தொழில் சார் குமுகம், குமுகாயம் என்ற பல்வேறு பொருள்களை தமிழ் விக்சனரியின் மூலம் அறியப்படுகிறது.

**சமூகவியல் குறித்து அறிஞர்கள் கருத்து**

- சமூகவியல் சமூகத்தைப் பற்றிய பொதுவான அறிவியலாகும் — கிங்ஸ்லே டேவிஸ்
- சமூகவியல் சமூக அமைப்புகளைப் பற்றிய அறிவியலே — எமிலிடர் கீஹீம்
- சமூக வாழ்க்கையைப் பற்றிய அறிவியல் ஆய்வே சமூகவியல் — ஓக்பம் மற்றும் நிம்கோப்.

**வணிக வரி (income tax) ஏய்ப்பு செய்யும் அரசியல் வாதிகள் துணை நிற்கும் அரசு அதிகாரிகள்**

அரசியல் வாதிகளின் பின்னணியில் செயல்படும் தொழில் மையங்கள், அரசியல் வாதிகளின் மறைமுக துணையுடன் இயங்கும் தனியார் தொழில் நிறுவனங்கள் முறையான வணிக வரியைக் கட்டாமல் சில முக்கிய பொறுப்பில் இருக்கும் அரசு அதிகாரிகளின் உதவியுடன் வரி ஏய்ப்பு செய்வது வாடிக்கையாகி வருகிறது.

ஒவ்வொரு தனிநபர் உட்பட நிறுவனங்கள் தொடங்கி வணிகம் நடைபெறும் அனைத்து விதமான தொழில் சார்ந்த வாணிபங்களுக்கும் வரி செலுத்துவது அரசால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது மக்களிடம் அரசு வரி வசூலிப்பது நாட்டின் திட்ட வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் தனிநபர் மற்றும் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வரி தேவையற்ற நுகர்வைக் குறைப்பதற்கும் விதிக்கப்படுகிறது. அரசுக்கு முறையாக வரி செலுத்தாமல் இருப்பது சட்ட விரோதமாகக் கருதப்படுகிறது. இது குறித்து ஆசிரியர் ஹமீதா குறிப்பிட்டுள்ள செய்திகள் சத்ய நாராயணன் அவர்களுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அரசுக்கு உரிய வரி செலுத்தாமல் ஒரு சில பொறுப்பற்ற அரசுஅதிகாரிகளின் உதவியுடன் வரி ஏய்ப்பு செய்யும் நிகழ்வினை படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

''இவர் என்ன இவ்வளவு ஈசியா சொல்லிட்டு இருக்காரு? டாப்டு பாட்டம் எல்லோருக்கும் பங்கு போகுது. இதுல யாரை பிடிச்சு அரசாங்க வரியை வசூல் பண்றது?''...

வரி ஏயப்பு செய்த சிகரட் மற்றும் புகையிலை பண்டல்களை பறிமுதல் செய்த வணிகவரித்துறை அதிகாரிகள் எண்பது லட்சம் வரித்தொகை வசூலித்தனர் என்று அடுத்த வாரத்தில் தானு பத்திரிக்கைகளுக்கு அறிக்கை கொடுக்கப் போவர் அந்த அதிகாரிக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

“நாராயணன் குழுமத்தின் முறைகேடுகளை புலனாய்வு பத்திரிக்கைகள் எழுதத் தொடங்க சத்ய நாராயணன் ஏன் இன்னமும் கைது செய்யப்படவில்லை என்று ஊடகங்கள் வரிந்து கட்டிக் கொண்டு கேள்வி எழுப்பின” (ப.எண்-154-155)(யா.கே.இ)

ஒரு தனிநபர் அல்லது தனியார் நிறுவனமொன்று வரி ஏய்ப்பு செய்தால் உடனடியாக தண்டிக்கும் அரசு அதிகாரிகள் அரசியல் பின்னணியில் செயல்படும் தொழில் நிறுவனங்கள் வரி ஏய்ப்பில் ஈடுபடும் பொழுது சட்டம் தன் கடமையைச் செய்ய தயக்கம் காட்டுகிறது. காரணம் அதிகார பலம் பணபலம். இன்றைய சமூகத்தில் பெருமளவில் ஊழல் சார்ந்த முறைகேடுகள் அரசியல் பின்னணியில் நடந்தேறுகின்றன. ஏதேனும் சில உண்மைத் தகவல்கள் மூலமாக அரசியல்வாதிகளின் வீட்டில் வணிக வரித்துறை சோதனை மேற்கொண்டால் குறிப்பிட்ட சொத்து மதிப்பிற்கான வரி ஏய்ப்பு நிகழ்ந்திருப்பின் கைது நடவடிக்கை விராசணை என்று அதிரடியாக துவங்கும் நடவடிக்கைகள் இறுதியில் ஊடகம் மக்களின் கண்துடைப்பிற்காக அரங்கேறுகிறது தக்க தண்டணைகள் கிடைப்பதில்லை.

நேர்மையான முறையில் தன் கடைமைச் செய்ய முனையும் சில அரசு அதிகாரிகளின் தலையீடு பணியிடை நீக்கம் அல்லது பணியிட மாறுதல் என அவர்கள் கேட்பாமலேயே பெற்றுத் தரும் என்பது நடைமுறையில் உள்ள ஒன்று. நாட்டின் குடிமகனாக தனது கடமைகளை மக்களுக்காகச் செய்யாமல் சுய இலாபத்துக்காக மட்டும் பணியாற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் போக்கை ஹமீதா முன் வைத்துள்ளார்.

மேலும், வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளிலிருந்து விற்பனைக்காக கொண்டுவரப்படும் பொருட்களுக்கு வரி செலுத்தாமல் உள்நாட்டில் விற்பனை செய்கின்றனர். இதனால் அரசாங்கத்திற்கு பெருமளவு வரி இழப்பு ஏற்படும் என்ற செய்தியை கீழ்வரும் வரிகளில் உணர்த்துகிறார்.

”பாருங்க ரவி எல்லா செக்போஸ்ட்சும் அலெர்ட் பண்ணுங்க. ஆம்னி பஸ்ல, ட்ரெயின்ல, மற்ற ஸ்டேட்ஸ்ல இருந்து முறைகேடா பில்ஸ் இல்லாம பான் மசாலா குட்கால இருந்து ப்ளோர் டைல்ஸ் எலக்ட்ரானிக்கூட்ஸ் வரைக்கும் நிறையப் பொருட்கள் கொண்டு வர்றாங்க. தயவு தாட்சண்யம் பார்க்காம சீஸ் பண்ணனும் பணம் வாங்கிட்டு கூட்சை கண்டுக்காம உள்ளே விடற அதிகாரிகள் மேல சிவியர் ஆக்ஸன் எடுக்கப்படும்னு சர்குலர் அனுப்புங்க.....”

வரி ஏய்ப்பு செய்பவர்களில் பெரும்பாலானோர் பில்ட்ரேடர்ஸ் என்ற பெயரில் செயல்படுவதை அவன் அறிந்தே இருந்தான்.

”நார்த்ல இருந்து ஏராளமான பொருட்கள் போலி ரெஜிஜ்ட்ரேஷன் பில்ஸ் மூலமா கொண்டு வந்து டேக்ஸ் கட்டாமலே தமிழ் நாட்டுல சேல் பண்றாங்க குறிப்பா டைல்ஸ், ஆட்டோ மொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் எலெக்ட்ரிகல் எக்விப் மென்ட்ஸ். ப்ளைவுட்ல தான் அதிகமா முறைகேடு நடக்குது இதுல தான் பல ஆயிரம் கோடி வரி இழப்பு ஏற்படுகிறது.” (ப.எண்-154)(யா.கே.இ)

பொய்யான சில ஆவணங்களைக் காட்டி வரி ஏய்ப்பு செய்யும் நிறுவனங்கள் அதிகளவில் காணப்படுகின்றன இதனைக் கண்டறிய அரசால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைத் தன்மை கண்டறியப்படுகிறது.

**மதுப்பழக்கம்**

சமூகத்தில் நிலவும் பல சீர்கேடுகளுக்கு மதுப்பழக்கம் ஒரு முக்கியக் காரணமாக அமைகிறது. மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்களால் குடும்ப உறவுகள் பாதிப்படைகின்றன. குடிப்பழக்கத்தால் உடல் உறுப்புகள் அனைத்தும் பாதிப்படைந்து ஆயுள் காலம் வெகுவாகக் குறையவும் மனநலம் பாதிப்படையும் தன்மையும் ஏற்படுகிறது. மதுவிற்கு அடிமையாக நேர்ந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அபாயம் உணர்த்தும் அதனைப் பொருட்படுத்தாது மது அருந்துகின்றனர்.

**"கையறியாமை உடைத்தே பொருள் கொடுத்து**

**மெய்யறியாமை கொளல்" (925)(குறள்)**

தன் கையிலிருக்கும் விலைப்பொருளைக் கொடுத்து உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மதுவை வாங்கி அருந்துதல் அறியாமையாகிய செயல் என திருவள்ளுவர் உரைக்கிறார். மதுப்பழக்கம் காரணமாக தந்தை தனது குடும்ப உறவுகளைவிட்டு விலகியிருக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார். இந்நிகழ்வை ஆசிரியர் ஹமீதா,

"எல்லா தவறுகளுக்கும் ஆரம்பம் மதுப்பழக்கம் தான் அதை ஆரம்பிச்ச பிறகு தான் எங்கப்பா குடும்பத்துல இருந்து ரொம்ப விலகிப்போனார். ஒரு கட்டத்துல முழுக்க முழுக்க மிருகமாகவே மாறிப்போனார்" (ப.எண்-337)(யா.கே.இ) என்று தனது வரிகளில் உணர்த்துகிறார்.

மதுப்பழக்கம் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் ஆங்காங்கே காணப்பட்டாலும் போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆண்களுக்கு நிகராக பெண்களும் மது அருந்துகின்றனர். மது அருந்துவதன் காரணமாக மூளை பாதிப்படைகிறது. மூளையில் ஏற்படும் போதைகாரணமாக சாலை விபத்துகள் பாலியல் சீண்டல்கள். உறவுகளில் சிக்கல் போன்ற சமூகச் சீர்கேடுகள் நிலவுகின்றன.

**கல்வி ஊழல்**

இன்றைய இளைய சமூகத்தின் எதிர்காலத் தேடல் கல்வியில் தான் அடங்கியுள்ளது. விலைமதிப்பற்ற கல்வியை பறிக்கும் கூட்டம் இன்றைய சமூகத்தில் அதிகளவில் காணப்படுகிறது. விலை கொடுத்து வாங்கப்படும் கல்வியினால் எதிர்கால மக்களின் வாழ்வு பாதிப்படையும் அபாயம் உள்ளது. உதாரணமாக மருத்துவத் துறையில் பணம் கொடுத்து பெறப்படும் பட்டம். பொதுமக்களின் நலனைப் பாதிக்கக்கூடும்.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றறை நிலை முனியாது கற்றல் நன்றே"(புறம்-183-(1-2)**

இன்றைய இலவசக் கல்வி போலன்றி சங்க காலங்களில் ஊதியமற்ற கல்வி உருப்படாது என்ற கருத்து நிலவியது. அதன் தொடர்ச்சியாக இன்றளவும் கட்டணம் செலுத்திப் பயிலும் கல்வி நிறுவனங்கள் அதிகளவில் பல்கிப் பெருகி காணப்படுகின்றன. பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களின் அடுத்த கட்டம் மேல்நிலைப் பட்டப்படிப்பு இதில், பெறும் மதிப்பு மிக்க துறைகளாக மருத்துவம் மற்றும் பொறியியல் துறை விளங்குகிறது. இதுபோன்ற பட்டப்படிப்புகளை தேர்வு செய்து படிப்பதற்கு தனியார் கல்வி நிறுவனங்களில் அதிகளவில் பணம் வசூலிக்கப்படுகிறது. ஏழை மாணவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த திறமையான மாணவர்கள் பொறியியல் மருத்துவம் போன்ற துறைகளில் படித்து பட்டம் பெறுவது சவாலான ஒன்றாக உள்ளது. இந்நிலையில் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மாணவர்கள் ஒரு சிலரின் பெற்றோர் தனக்கு சொந்தமான நிலங்களை விற்று எப்படியேனும் தன் மகன் அல்லது மகளை படிக்க வைத்து நல் நிலையை அடைய வேண்டும் என்ற ஆவலில் பணத்தைக் கொடுத்து ஏமாறும் அவல நிலையை ஆசிரியர் ஹமீதா,

''கல்வியை அதிலும் உயிர் காக்கும் துறையான மருத்துவக் கல்வியை விலை கொடுத்து வாங்க கற்றை கற்றையாய் பணத்துடன் வருங்கால மருத்துவர் சமுதாயத்தின் தந்தையர் பலரும் குழுமியிருந்தனர். ப்ளஸ் டூ தேர்வு முடிவுகள் வெளியாக இன்னமும் இரண்டொரு நாட்களே இருந்தன'' (ப.எண்-78)(யா.கே.இ)

தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு முன்பதாகவே படிப்பதற்கு இடமளிப்பதாகக் கூறி எந்த ஆவணமுமின்றி இரகசியமாக பணம் பெறப்படுகிறது. மேலும், தேர்வு முடிவுகள் வெளியாகாத சூழலில் ஒரு சில காரணங்களுக்காக பணத்தைத் திரும்பப் பெறும் நோக்கில் சென்ற பெற்றோருக்கு காத்திருந்த அதிர்ச்சி.

''சார் ரெண்டு நாளைக்கு முன்னால முப்பது லட்சம் பணம் குடுத்தேனுங்க.... வேற பக்கம் விசாரிச்சதுல இதைவிட கம்மியா ரேட் கேள்வி பட்டனுங்க... சரி ரிசல்ட் தான் வரலையே.... கேட்டு பாப்போன்னு போனேனுங்க.. பணமா? நீயா? எப்ப குடுத்தேன்னு கேட்குறாங்க சார் சொத்து வித்து கொண்டு வந்த பணம்... கருப்புப் பணம் இல்லீங்க சார்'' (ப.எண்-79-யா.கே.இ)

முறையான ஆவணங்களின்றி பெறும் தொகையினை கொடுத்து ஏமாறும் படிப்பறிவற்ற பெற்றோர் இன்றைய நவீன சமூகத்திலும் காணப்படுகின்றனர். இதுபோன்ற பணப்பறிப்பு மோசடியில் ஈடுபடும் கல்வி நிறுவனம் எதிர்க்கட்சித் தலைவர் சத்ய நாராயணன் குழுமத்திற்கு சொந்த நிறுவனம் என்று ஆசிரியர் ஹமீதா குறிப்பிடுகிறார். இன்றைய சமூக நடைமுறையிலும் பல அரசியல் கட்சி அமைச்சர்கள் ஊழல் முறைகேடுகளில் சிக்கி வருகின்றனர் என்பது பொறுப்பற்ற ஆட்சியாளர்களைப் பெற்ற நாட்டின் இன்றைய சூழல் ஊழலால் நிறைந்துள்ளது என்பதற்குச் சான்றாக அமைகிறது.

**கள்ளக் காதல்**

கணவன் மனைவி உறவில் ஏற்படும் விருப்பமின்மை, திருப்தியின்மை, எதிர்பார்ப்பு நிறைவேறாமை போன்ற பல காரணங்களின் அடிப்படையில் வேறொருவருடன் இவை அனைத்தும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் சூழலில் தான் கள்ளக்காதல் உருவாகிறது.

கள்ளக் காதல் இரகசியமான முறையில் பேணப்படுகிறது. கணவன், மனைவி குழந்தைகளுடன் வாழும் பொழுதே இதுபோன்ற உறவு நீடிக்கிறது. திருமணத்தை மீறிய உறவுகள் சமூகத்தையும் குடும்ப உறவுகளிடையேயும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கள்ளக்காதல் காரணமாக கொலை, தற்கொலை, அவமதிப்பு, குடும்ப உறுப்பினர்கள் பாதிப்படைதல் போன்ற பல்வேறு சமூக சீர்கேடுகள் ஏற்படுகின்றன. ஆசிரியர் ஹமீதாவின் வரிகளில் கள்ளக் காதல் குறித்த ஒரு சில வரிகள்,

''கண நேர சபலத்துக்கு ஆளாகும் ஆண்கள் ஒரு நிமிஷம் அவங்களை நம்பியிருக்கும் குடும்பத்தை பத்தி யோசிச்சு பார்த்தா... இப்படி வழி மாறி போக முடியுமா? யோசிப்பாங்களா இருக்கும்! ஆனா ஆண் அப்படின்ற மமதை கண்ணை மறைக்குமோ? என்னதான் தறிகெட்டு நடந்தாலும் பாதிப்பு என்னவோ மனைவிக்கும் குழந்தைகளுக்கும் தானே?

கௌரவமான வாழ்க்கை வாழும் ஒரு குடும்பம் அக்குடும்பத் தலைவனின் அடாத செயலால் சுமக்கும் சிலுவைகள்'' (ப.எண்-44(யா.கே.இ)

இவ்வரிகள் ஒரு ஆணின் குடும்பம் தாண்டிய உறவை வெளிப்படுத்துகின்றன. தனது மனைவி குழந்தைகளின் மீது பொறுப்பற்ற ஆணாக செய்யும் தவறுகளினால் ஒன்றும் அறியாத குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. திருமண உறவில் இணையும் கணவன் மனைவிக்கிடையே சரியான புரிதலின்மை காரணமாக விரிசல் ஏற்படுகிறது. திருமண வாழ்வில் இணையும் ஆண் பெண் இருவரும் ஒருவரை ஒருவர் உண்மையான அன்புடன் தன் பொறுப்புணர்ந்து செயல்படுவதால் இது போன்ற தேவையற்ற உறவுகளிலிருந்து தன்னைக்

காத்துக் கொண்டு ஆரோக்யமான உறவுகளைப் பேணுதல் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பயனளிக்கும்.

**முடிவுரை**

இதுவரைக் கூறப்பட்ட சமூகச் சிக்கல்களின்றி நேர்மையான அரசு அதிகாரி எதிர் கொள்ளும் சிக்கல்கள் இளம் தலைமுறையினரின் தற்கொலை எண்ணம். எச்.ஐ.வி தொற்றுடன் போராடும் பெண், மணல் கடத்தல் போன்ற பல்வேறு சமூகச் சிந்தனைகளையும் யாரைக் கேட்டது இதயம் புதினத்தின் மூலம் ஆசிரியர் S.S ஹமீதா அவர்கள் உணரச் செய்கிறார். சமூக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம் என்பதை உணர்த்தும் வகையில் ஹமீதாவின் வரிகள் இடம்பெற்றுள்ளது சிறப்புமிக்கது.

**துணை நூல் பட்டியல்**


1.சமூகவியல் - டாக்டர் சு.வெங்கடேசன்
முதல்வர் (ஓய்வு)
வர்த்தமானன் பதிப்பகம்
21,இராமகிருஷ்ணா தொரு
தியகராய நகர், சென்னை-17.

2.தமிழ் விக்சனரி

3.திருக்குறள் (925)

4.புறநானூறு(183,1-2)

5.யாரைக் கேட்டது இதயம் - எஸ்.எஸ்.பப்ளிகேஷன்ஸ்
21, திருமலையப்பன் தெரு
பிளாட் எண் 4 ஶ்ரீ பி பேலஸ்
புரசைவாக்கம், சென்னை — 600 007.

1.Samoogaviyal — Dr.S.Vengadesan

2.Tamil vicshanari

3,Thirukkral

4.Purananooru

5.Yarai kettathu ithayam
S.S publications
21, Thirumalaiyappan street.

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com